
# திராவிடத்தால் வாழ்கிறோம்

946

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

---

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி


குமரன்தாஸ்

26

படங்கள் உதவி : ஞானம்







# புதையல்: மூடத்தனத்துக்கு எதிராகச் சுழன்ற பேனா!

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

*‘புதையல்’ திரைப்படம் கைத்தறி ஆடைகளின் சிறப்பைப் பற்றிய பாடலுடன்தான் தொடங்கும். அதாவது, 1950 களில் தி.மு.க.வின் கொள்கையாக இருந்த கைத்தறி நெசவாளர் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவது என்கிற லட்சியத்தைப் பிரச்சாரம் செய்யும் விதமாகப் படத்தின் நாயகி பரிமளா (பத்மினி) ‘சின்னச் சின்ன இழை பின்னிப் பின்னி வரும் சித்திரக் கைத்தறிச் சேலையடி...’ எனத் தனது தோழிகளுடன் சேர்ந்து ஆடிப்பாடுவாள்.*

*அதனைப் பார்த்துப் பரிமளாவின் தந்தை தாண்டவன், “உன் மக ஆட்டம் பாட்டத்தைப் பார்த்தியா? இந்த மாதிரி பத்துப் பொண்ணுங்க சேர்ந்துக்கிட்டு, ஊர் ஊராகப் போயி இந்தப் பாட்டப் பாடி ஆடுனா, நம்ம கைத்தறிக்குப் புது மவுசே வந்திடும்” என்கிறார். அதற்கு அவர் மனைவி, “இந்தத் தொழில் நம்மளோடு போகட்டும், அவளாவது படித்த மாப்பிள்ளையைத் திருமணம் செய்து பட்டணத்திற்குப் போய் சுகமாக வாழட்டும்” என்கிறாள்.*

### கூலிகளின் கண்ணீர் கதை

*கடற்கரையில் அமர்ந்து பரிமளாவிடம், துரை தனது கதையைக் கூறிடும் காட்சியில், அன்றைய தமிழ்நாட்டில் வாழ வழியற்று தமிழர்கள் கூலிகளாக இலங்கைத் தேயிலைத் தோட்டத்திற்குப் பிழைக்கப்போன கண்ணீர் வழியும் சோகக் கதையை, உரையாடல்களாக்கி யிருப்பார்.*

**துரை:** *திரைகடல் ஓடித்தான் திரவியம் தேடவேண்டும் என்ற நிலைபெற்ற தென்னகத்து மண்ணிலே பிறந்த திக்கற்றவர்கள், அலைகளின் முதுகிலே கட்டை சவாரி செய்து, இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே எறும்புகளென மொய்த்தார்கள். அந்த சுறுசுறுப்பான எறும்புகளிலே ஒன்றுதான் என்னையும் என் தங்கை தங்கத்தையும் பெற்றெடுத்த குமாரவடிவு எனும் தொழிலாளி” என அந்த வசனங்கள் ஊசியாக நெஞ்சைத் தைக்கும்.*

*தனது தந்தை கைது செய்யப்பட்ட காட்சியை, துரை, பரிமளாவிடம் சொல்லும்போது கலைஞரின் வசனங்கள் கண்களைக் குளமாக்கும்.*

**துரை:** *ஆற்றுவாரில்லை எமைத் தேற்றுவாரில்லை. காம்பறுந்த முல்லை அரும்புகளாய்த் தேம்பியழுதோம் நானும் என் தங்கையும். பெற்றெடுத்த மகராசி பிரேத விசாரணைக் கூடத்திலே. தொட்டு வளர்த்த தந்தையோ சிறைச்சாலைப் பாதையிலே சிந்தையெலாம் கொதிப்பேற வெந்தணலில் நடந்து சென்றார். மிரட்டுகின்ற மனிதர் வாழ் மேதினியில், உருட்டுகின்ற விழி படைத்த ஓர் சாது, அவன் உள்ளமெல்லாம் சூது. அது அப்போது எனக்குத் தெரியாது. அவன் அழைத்தான் தமிழ் நாட்டுக்கு. தங்கையுடன் புறப்பட்டேன். எங்குற்றார் எங்கள் தந்தை என்று பொங்குற்ற நெஞ்சத்தோடு புலம்புகின்ற கண்களோடு... என்று துரை பரிமளாவிடம் விவரிப்பான்.*

### பெரிய மனிதர்களின் வாழ்க்கை!

*படத்தின் வில்லனான பெரிய மனிதர் வெள்ளியம்பலத்தை (டி.எஸ்.பாலையா) அறிமுகம் செய்யும்போது, அவரது குணநலன்களை அவர் வாயாலேயே பார்வையாளருக்குப் புரியவைக்கும் விதமாக கலைஞர் வசனம் எழுதியிருப்பார்.*

**வெள்ளியம்பலம்:** *பணம், பட்டம், பதவி, அந்தஸ்து, மானம், மரியாதை இவைகள் எல்லாம் வேணும்னா எந்தக் காரியத்தை வேணும்னாலும் கூசாமல் செய்யலாம்... களவு செய்யணும் ஆனா, கன்னக்கோல் மட்டும் நம்ம கையில இருக்கக்கூடாது. கடத்தல் வியாபாரத்தச் செய்யலாம். ஆனால், வெளியே மட்டும் நம்ம பெயர் அடிபடக்கூடாது” என்று தனது அடியாள்களிடம் சொல்கிறார். இப்படியான உரையாடல்கள் மூலம் அன்றைய பெரிய மனிதர்களைத் தோலுரித்திருப்பார்.*

*மற்றொரு காட்சியில், பாதாள அறையில் துரையை மிரட்டி ‘புதையல் எங்கே இருக்கிறது?’ என வெள்ளியம்பலம் மிரட்டும் காட்சியில், ஊர்ப் பெரிய மனிதர்கள் என அழைக்கப்படக் கூடியவர்களின் இலட்சணத்தைத் தோலுரித்துக் காட்டுவார்.*

> **‘புதையல்’ திரைப்படத்தின் மையமான கருவாக, ‘மனிதர்களிடம் காணப்படுகின்ற கூடா ஆசையால் விளையும் கேடு’களாகவே உள்ளன.**

### பெண்கள் உடைமையா?

*அதேபோல துரையின் மீது மோகம் கொண்டு, மேனகா தனது ஆசையை வெளிப்படுத்தும் காட்சியில், துரை அதனை நாகரிகமாகவும், நேர்மையாகவும் மறுக்கும் விதமாக கலைஞர் படைத்திட்ட வசனங்கள் அதற்கு முன்பும் பின்பும் யாரும் படைத்திடாதவை.*

**மேனகா:** *...... பெண்கள் சமுதாயத்தைப் பற்றி பிரசங்கம் புரிபவர்களுக்குத் தனிப்பட்ட ஒரு பெண்ணின் சங்கடங்கள் புரியாது போலும்?*

**துரை:** *புரியாமலென்ன? புலியின் பசிக்கு ஆடுகளைத்தான் கொடுக்க முடியும் சர்க்கஸ்காரனால். அதைவிட்டு, தானே இரையாக முடியுமா?*

**மேனகா:** *நீங்கள் குறிப்பிடும் ஆடுகள்?*

**துரை:** *நான் உனக்கு வழங்கும் அறிவுரைகள்.*

**மேனகா:** *ஏட்டுச் சர்க்கரை இனிக்காது.*

**துரை:** *நான் தரும் சர்க்கரை நாவுக்கல்ல, சகோதரி இதயத்திற்கு...*

**மேனகா:** *புலி என்றீர்கள் என்னை. அய்யா சர்க்கஸ்காரரே புலியல்ல நான், இன்ப வானிலே பறக்க சிறகடிக்கும் புறா. என்னைப் பாருங்கள்... சந்தன வில்லை சகதியிலே கிடக்கலாமா? கிடந்தால், அதைப் பார்த்துக் கொண்டுதான் போவீர்களா?*

**துரை:** *அந்தக் கோமேதகம் எனக்குச் சொந்தமில்லையே அம்மா.*

**மேனகா:** *அப்படியானால் சுய உடைமையில்தான் அக்கறை காட்டுவீர்களா?*

**துரை:** *ம் ஹ... இம்மாதிரி விஷயங்களில் பொதுவுடைமை கூடாதம்மா... என்று எழுதியிருப்பார்.*

### மூடத்தனங்களுக்கு எதிராக

*இறுதியில், புதையலைத் தேடி தனது இளம் மனைவியையே கொலை செய்துவிட்டு வரும் வெள்ளியம்பலத்திடம் பேசும் வசனங்கள் உக்கிரமாக இருக்கும்.*

**துரை:** *புதையலும் எடுப்பாய், பூமியையும் துளைப்பாய்! பொருள் வெறிபிடித்த பொல்லாப் பிறவியே உன் பணவெறிக்குப் பலியானோர் எத்தனை பேர்? உன் படாடோப தர்பார் கண்டு பயந்து நடுங்கிச் செயலிழந்து சீரழிந்த குடும்பங்கள் எத்தனை எத்தனை? உன் வஞ்சகத்திற்குத் தலைவணங்காத வாலிபனான என்னையே வாட்டி வதைத்து, பலிபீடத்தில் நிறுத்தப் பார்த்தாயே? இதைப் போல் எத்தனை பேருடைய வாழ்வை, உன் கோர நகங்களால் பிராண்டியிருப்பாய்? உன் பசியெடுத்த பாழும் வயிறு எத்தனை ஏழைகளை விழுங்கி இப்படிப் பருத்திருக்கிறதோ யார் கண்டார்கள். உன் ரத்தத் தினவு கொண்ட நாக்கிலே அகப்பட்டுச் சுருண்டு மடிந்த மனிதப் பூச்சிகள் எத்தனை எத்தனையோ? யார் சொல்ல முடியும் அந்தச் சுடுகாட்டுக் கணக்கை... என அந்த அனல் பறக்கும் வசனங்கள் பொருள் வெறி பிடித்தவர்களுக்கு எதிராகப் பொங்கும்.*

***‘புதையல்’*** *திரைப்படத்தின் மையமான கருவாக, ‘மனிதர்களிடம் காணப்படுகின்ற கூடா ஆசையால் விளையும் கேடு’களாகவே உள்ளன. எஸ்டேட் முதலாளியின் கூடா ஆசை குமாரவடிவுவின் குடும்பத்தைச் சிதைக்கிறது. முற்றும் துறந்த சாமியாரான சாதுவிற்கு ஏற்படும் பொன்னாசை, குழந்தை தங்கத்தின் உயிரைப் பறிப்பதுடன் அவனது உயிரையும் பறித்து விடுகிறது. பெரிய மனிதர் வெள்ளியம்பலத்தின் ஆசை அவர் இளம் மனைவியின் உயிரைப் பறிக்கிறது.*

*இப்படி இந்தச் சமுதாயத்தில் மனிதர்களிடத்தில் நிலவும் மூடத்தனங்களை எடுத்துக்காட்டி அவற்றையெல்லாம் கைவிட்டு, ‘போதும் என்கிற மனதுடன் உழைத்து ஒற்றுமையாக வாழ்வதே நல்வாழ்க்கைக்கான சிறந்த பாதை’ என்ற ரகசியத்தையே கலைஞரின் புதையல் அனைவருக்கும் சொல்கிறது.*

**...காட்சி விரியும்**

---

## பெண்களின் சுயமரியாதையைக் காக்கும் உரிமைத் தொகை!

லண்டனைச் சேர்ந்த கிங்ஸ் கல்லூரியின் ‘டிக்கன்சன் பூன் ஸ்கூல் ஆப் லா’, தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்படும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளது. ‘A Right to Care, A Right to Welfare: A Study of the Kalaignar Magalir Urimai Thittam’ (கவனிப்பதற்கான உரிமை, நலனுக்கான உரிமை: கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பற்றிய ஆய்வு) என்ற பொருண்மையில் வெளியான அந்த ஆய்வு குறித்து, ‘தி ஹிந்து’ ஆங்கில நாளேட்டில் பத்திரிகையாளர் மேக்னா கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

“கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பெண்களின் சுயமரியாதையாகவும் தன்னம்பிக்கையாகவும் மாறியிருக்கிறது. இந்த ஆயிரம் ரூபாயை 49% பேர் வீட்டுச் செலவுகளுக்கும், 49% பேர் காய்கறிகள் பழங்கள் மற்றும் மீன் ஆகியவற்றை வாங்குவதற்கும், 22% பேர் மருத்துவக் கட்டணத்துக்கும், 20% பேர் மருந்துகளுக்கும், 20% பேர் சமையல் எரிவாயு வாங்குவதற்கும், 17% பருப்பு வகைகளை வாங்குவதற்கும் பயன்படுத்துகிறார்கள். 9% பேர் சிறுகடன்களைத் தீர்க்கவும், 15% பேர் பிள்ளைகளின் கல்விச் செலவுகளுக்கும் செலவழிக்கிறார்கள்.

தன்னிறைவு உணர்வு, முக்கிய பணத்தேவைகளுக்கு கணவனை சார்ந்திருக்காமை, கடன் மற்றும் பணத்தேவை சுமைகளிலிருந்து விடுதலை உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு ஆகியவற்றை 96%-க்கு மேற்பட்ட பெண்கள் ஆய்வின்போது வெளிப்படுத்தியதாக டிக்கன்சன் சட்டத்துறை ஆய்வாளர்கள் சொல்லியிருக்கிறார்கள்” என கட்டுரையாளர் மேக்னா குறிப்பிடுகிறார்.

அந்தக் கட்டுரையை, தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்து கருத்து தெரிவித்துள்ள எழுத்தாளர் அழகியபெரியவன், “இழிவுபடுத்தி விமர்சனம் செய்பவர்களுக்கு எப்போதும் இதுபோன்ற உண்மைகள் தேவைப்படுவதில்லை! கலைஞர் என்ற சொல்லே போதும் அவர்கள் எரிச்சல் அடைவதற்கு! கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டமும், மகளிர் கட்டணமில்லா பேருந்துப் பயணத் திட்டமும் வரலாற்றில் இடம் பிடித்த திட்டங்கள் என்பதே உண்மை” எனத் தெரிவித்துள்ளார்.

---

## ஃப்ளாஷ்பேக்



### எளியோரை ஏற்றிவைக்கும் கழகம்!



மோ.இராஜ்பிரகாஷ்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை, நான் கல்லூரி மாணவராக இருந்தபோதே சந்தித்து, தேர்தல் நிதி அளித்த இந்தப் படம் என் வாழ்நாள் அடையாளம். அப்போது, ஊத்துக்காடு ஊராட்சி இளைஞர் அணி அமைப்பாளராக இருந்தேன். பள்ளிக்கூட காலத்தில் இருந்த கழகப் பற்றும், உணர்வும் இன்றும் என்னை இயக்கி வருகின்றன. எளிய பின்னணியில் இருந்து வருபவர்களையும் கழகம் என்றென்றும் ஏற்றிவைக்கும்.

**– மோ.இராஜ்பிரகாஷ், இளைஞர் அணித் துணை அமைப்பாளர், வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம், காஞ்சிபுரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

---

## நம் வரலாறு — கர்நாடக தி.மு.க. மாநாடு!

1955-ஆம் ஆண்டு, பிப்ரவரி 12 மற்றும் 13 தேதிகளில் கர்நாடக தி.மு.கழகம் சார்பில், சமூக சீர்திருத்த-அரசியல் மாநாடுகள் பெங்களூரில் நடைபெற்றன. அரசியல் எதிரிகளால் படுகொலை செய்யப்பட்ட கழகத் தொண்டர் மஜீத் பெயரில் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா, காஞ்சி கல்யாண சுந்தரம், ப.உ.சண்முகம், என்.வி.நடராசன் உள்ளிட்ட முன்னணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131